


# தமிழிலக்கியங்களில் பன்முகப்பார்வை

## பன்னாட்டுக் கருத்தரங்கம்








தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி தமிழாய்வுத்துறை

கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம்

# நூல் விவரக் குறிப்பு


தலைப்பு : தமிழிலக்கியங்களில் பன்முகப்பார்வை

பதிப்பாசிரியர்: முனைவர் ஜெ.ரஞ்சனி

முனைவர் மோ. பாட்டழகன்

மொழி : தமிழ்

பதிப்பு : முதற்பதிப்பு : 2016

ISBN எண் : 978-81-927457-6-3

நூல் அளவு : டெம்மி

பக்கங்கள் : 500

பொருள் : ஆய்வு

கணினி அச்சு : கே.எல்.லட்சுமி

விலை : ரூ. 400/-

அச்சிட்டோர் : யுனிவர்சல் பிரிண்ட்

தாள் : என்.எஸ்.புக். பிரிண்ட்

முகப்பு அட்டை : ஓவியர் மணி


கருத்துகளுக்கு கட்டுரையாளர்களே பொறுப்பு

53. பொட்டுக் கட்டும் பண்பாட்டைக் குலைத்த செடல் 313
- முனைவர் கு. மணிகண்டன்
54. ஐங்குறுநூற்றில் நீர் நிலை மேலாண்மைச் சிந்தனைகள் 321
- த.மணிமேகலை
55. நாட்டுப்புற இலக்கியம் காட்டும் குழந்தைப் பாடல்கள் 326
- அ. மலர்கொடி
56. தமிழரின் மரபுசார்ந்த விளையாட்டும் எந்திரயுக விளையாட்டும் 331
- முனைவர்.த.மலையரசி
57. பெண்களின் வாழ்க்கைப் பணியும் சமூகத்தில் பெற்றிருக்கும் தகுதி நிலையும் 337
- முனைவர் மா.மதுரவேணி
58. இந்தியப் பண்பாட்டிற்கு புத்த சமயம் அளித்த கொடை 341
- மா. மாணிக்கம்
59. காலந்தோறும் விடுகதைகள் 348
- முனைவர் ஜெ. முத்துச்செல்வன்
60. நாலும் இரண்டும் - ஓர் ஒப்பியல் பார்வை 354
- இரா. முருகன்
61. மன்னர்கள் புகழ்பாடும் மதுரைக்காஞ்சி 357
- ஆ . மெர்சி ஆஞ்சலா
62. சங்க இலக்கியத்தில் சமயக்கோட்பாடு 362
- முனைவர் ஈ.யுவராணி
63. பெண்ணிய நோக்கில் பிள்ளைத்தமிழ்கள் 370
- முனைவர் ஜெ.ரஞ்சனி
64. ஜி.ஆர். சுரேந்திரநாத் சிறுகதைகள் 374
- பி.ரசிதாபேகம்
65. "இன்னொரு காரணம்" தொடர்கதையில்... 378
- சு. ரம்யா
66. சங்க இலக்கியத்தில் திருமால் 382
- ம.ராதா
67. மலேசியாவில் தமிழர்கள் - ஓர் பார்வை 386
- ப. ராஜசேகர்

# 61. மன்னர்கள் புகழ்பாடும் மதுரைக்காஞ்சி

ஆ. மெர்சி ஆஞ்சலா
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
பாத்திமாக் கல்லூரி
மதுரை - 18

## முன்னுரை:

வாழும் இலக்கியமாக மனிதகுல வாழ்வியலை விளக்கும் இலக்கியமாகத் திகழ்வது சங்க இலக்கியம். மக்களின் அகப்புற வாழ்வை எடுத்துக் கூறுகிறது. பத்துப்பாட்டில் இடம்பெறும் புறநூல்கள் ஆறனுள் ஒன்றாக மதுரைக்காஞ்சி அமைகிறது. மன்னன் புகழ்பாடும் இந்த இலக்கியம் நாட்டுவளம், மதுரை மாநகரின் சிறப்புகள் மட்டுமல்லாது நிலையாமையை உணர்த்துவதாகவும் அமைகிறது. பாண்டிய மன்னர்களின் பெருமை, வீரம், புகழ் போன்றவற்றில் மன்னனின் மாண்பு விளக்கம் பெறுகிறது. ஆள்வோர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளின் புலப்பாடாகவும் மதுரைக்காஞ்சி இருப்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## மன்னன் குலப்பெருமை:

மூவேந்தர்களும் சிறப்புற ஆண்ட காலகட்டமாக இருப்பது சங்ககாலமாகும். இவர்கள் தங்களுக்குள் ஆட்சிப்பரப்பை விரிவுபடுத்துவதில் போட்டியிட்டுக் கொண்டும் குறுநில மன்னர்களைத் தங்களுக்குப் பணிய வைத்தும் ஆட்சி புரிந்ததோடு மக்களைப் பேணுவதிலும் மாண்புற்று விளங்கினர். மதுரைக் காஞ்சி பாண்டியன் நெடுஞ்செழியனின் புகழ்பாடுவது மட்டுமன்றி அவனது முன்னோர் பெருமையையும் பறை சாற்றுகிறது.

### i. வடிம்பலம்ப நின்ற பாண்டியன்:

இவன் வீரமிக்க யானைகளையும் குதிரைகளையும் விரைந்து செல்லும் தேர்களையும் வாட்போரில் வல்ல வீரர்களையும் கொண்டு மறப்போர் புரிந்து வெற்றி ஈட்டினான். வேளிர் போன்ற குறுநில மன்னர்களையும், குறிஞ்சி நில மன்னர்களையும் வென்றதோடல்லாமல் அவர்கள் தங்களது நிலங்களையே மன்னனுக்குக் கொடுத்துவிட பெருமை பெற்று விளங்கியவன்.